இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை - 2023 யூலை

## (104) வணிகச் சூழல்

பெரும்பாலும் வணிகச் சூழல் பாடத்தின் அனைத்து பாடப்பரப்புகளையும் குறிப்பாக மட்டம் I இற்கான பகுதிகளை இவ்வினாப்பத்திரம் உள்ளடக்கியிருப்பதால் பரீட்சார்த்திகளின் பாடப் பரப்பு சம்பந்தமான ஒட்டுமொத்த அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதே அதன் நோக்கமாகக் காணப்பட்டிருந்தது. மொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்த அதேவேளை ஏனையவர்கள் நன்றாக விடையளிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு எவ்வாறு விடையளித்துள்ளனர் என அவதானித்தபோது, வினாக்களை விளங்கிக் கொள்ளும்போது ஏற்படும் சிக்கல்களைத் தடுப்பதும் போதுமான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள பிரதான விடயங்களை எழுதுவதன் முக்கியத்துவம் பற்றியும் உணரப்பட்டது.

## <u>பகுதி A</u>

**வினா இல. 01**

இந்த வினாவில் வணிகச் சூழல் பாடத்தின் ஒட்டுமொத்த பாடப்பரப்பும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 100% ஆன பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதிகமானவர்கள் வினா இலக்கங்கள் 1.6, 1.10, 1.17, 1.18 ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன:

**1.6** பெரும்பாலான பரீட்சார்த்திகள் 'நிதிச் சந்தை' தொடர்பில் சரியான புரிதலைக் கொண்டிருக்காததால் தவறான விடைகளையே தெரிவு செய்திருந்தனர். ஆனால், சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**1.10** அதிகளவான பரீட்சார்த்திகள் தொழில் முயற்சியாண்மையின் முக்கியத்துவத்தை இனங் கண்டிருக்கவில்லை. அவர்கள் சரியான விடையின் இலக்கமான (2) ஐத் தெரிவு செய்வதற்குப் பதிலாக விடை இல. (4) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**1.17** அதிகளவான பரீட்சார்த்திகள் ''இரட்டைக் காப்புறுதி'' என்பது பற்றி அறிந்திருக்கவில்லை. இதனால், அவர்கள் ''மறு காப்புறுதி'' போன்ற வேறுபட்ட விடயங்களை விளக்கியிருந்தனர்.

**1.18** அதிகளவான பரீட்சார்த்திகள் ''வணிகமொன்றின் உள்ளகச் சூழல் மாறிகளை'' அடையாளங் காணவில்லை. பெரும்பாலானவர்கள் 'உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்கள் என எழுதி 2 புள்ளிகளில் 1 ஐப் பெற்றிருந்தனர். சரியான விடைகளாக பெறுமதி முறைமை, நிறுவன கலாசாரம், நோக்கக் கூற்று, முகாமைக் கட்டமைப்பு, மனித வளங்கள் மற்றும் பிற வளங்கள் என்பன இருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், மேற்படி வினாக்களைத் தவிர, அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

**ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானது.**

## பகுதி B

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வழங்கப்பட்டன.

### வினா இல. 02

இந்த வினா ''தனியுடமை வியாபாரத்தை'' அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு சரியாக விடையளித்திருக்கவில்லை. அவர்கள் ''சோமசிறியின் காய்கறி விற்பனையை'' ஒரு வணிகமாக வகைப்படுத்தியிருக்க வில்லை. அதற்குப் பதிலாக ''தனியுடமை வியாபாரத்தின்'' பண்புகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** இங்கு தனியுடமை வியாபாரத்தின் பண்புகள் பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** அதிகளவான பரீட்சார்த்திகள் தனியுடமை வியாபாரமொன்றின் அனுகூலங்களை இனங்கண்டிருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

### வினா இல. 03

இங்கு ''வெளிநாட்டு வர்த்தகம்'' பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி (a)** பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இந்தப் பகுதிக்கு சரியாக விடையளிக்க வில்லை. அவர்கள் நாட்டினுள் குறிப்பிட்ட பொருள்களுக்கான வர்த்தகத் தடைகள் / வரையறைகள் பற்றி எழுதியிருந்தனர். மிகவும் குறைந்தளவான பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைப் பயன்படுத்தி இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரதிகூலங்களை எழுதி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்த போதிலும் அதனை சரியாக விளக்கியிருக்கவில்லை. இதனால் அதற்காக வழங்கப்பட்ட புள்ளிகளை மாத்திரமே அவர்களால் பெறக்கூடியதாக இருந்தது.

### வினா இல. 04

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஏற்பாட்டியல் முறைமையின் வகைகளை அடையாளங் கண்டிருக்கவில்லை. அதிகமானவர்கள் அதற்குப் பதிலாக போக்குவரத்து வகைகளை எழுதியிருந்தனர். எனினும் ஒரு சிலர் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)** அதிகளவான பரீட்சார்த்திகள் சர்வதேச வர்த்தகத்திற்கு நகர்வதற்கான அனுகூலங்கள் பற்றி புரிந்து கொண்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் தங்களது பொது அறிவைக் கொண்டு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**வினா இல. 05**

இங்கு தொடர்பாடல் சம்பந்தமான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறைந்த கிரயம், கிடைக்கக்கூடிய தன்மை, வேகம், பூரணத்தன்மை, சுருக்கமான தன்மை, அக்கறை, உறுதியான தன்மை, பணிவு, சரியான தன்மை மற்றும் பாதுகாப்பு /அந்தரங்கத்தன்மை போன்ற தொடர்பாடல் முறைகளின் குணவியல்புகளை அடையாளங் கண்டிருந்தனர். ஆனால், சிலர் குணவியல்புகளை எழுதுவதற்குப் பதிலாக தொடர்பாடலின் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** பெரும்பாலானவர்கள் இந்தப் பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். மிகச் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தொடர்ச்சியான தொடர்பாடலின் முக்கியத்தவத்தை விவரிக்கத் தவறியிருந்தனர். அவர்கள் 4 புள்ளிகளில் 2 ஐ மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.

**பகுதி (c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொடர்பாடல் தவிர்ந்த வேறு ஆதரவுச் சேவைகளை எழுதியதன் மூலம் வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06**

இது ‘‘சாந்தன் என்டபிரைஸ்’’ தொடர்பான விடய ஆய்வின் அடிப்படையிலமைந்த ஒரு வினாவாகும். பெரும்பாலும் அனைத்து பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களில் பலர் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதி (a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தரப்பட்ட நடைமுறையில் காணப்படும் விடயங்களுடன் SWOT பகுப்பாய்வைத் தொடர்புபடுத்தி வணிகச் சூழலை அடையாளங் கண்டிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் SWOT இன் அர்த்தத்தை விவரித்திருந்தனர்.

**பகுதி (b)** இந்த வினா, தொழில் முயற்சியாளர் மற்றும் தொழிலதிபர் சம்பந்தமான அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சாந்தன் ஒரு தொழிலதிபர் என அடையாளங் கண்டிருந்தனர். மீதிப்பேர் அவர் ஒரு தொழில் முயற்சியாளர் என அடையாளங் கண்டிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலானவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (c)** இந்த வினா, பங்காளர்களின் வகைகளைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். மிகச் சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நண்பர்கள், வங்கிகள், குடும்ப உறுப்பினர்கள் போன்ற நிதி மூலங்களை பங்காளர்களின் வகைகளாக எழுதியிருந்தனர்.

**பகுதி (d)** இந்தப் பகுதியானது காப்புறுதி செய்ய முடியாத இடர்களைப் பரீட்சித்திருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகளே இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. 40% ஆனவர்கள் இவ்வினாவுக்கு சரியாக விடையளித்திருந்தனர். சிலர் காப்புறுதி எண்ணக்கருவைப் புறந்தள்ளி தரப்பட்ட விவரணத்திலிருந்து விடைகளை எழுதியிருந்தனர்.

**Part (e)** இந்த வினா நிறுவனமொன்றுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வசதிகள் பற்றிப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்றாக வாசித்து, விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

---

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்:**

(1) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடப்புத்தகங்களை படித்தல் வேண்டும்.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதும் உரிய வினாத்தாள்களுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரலுக்கேற்ப விடையளித்து பயிற்சி பெறுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

(3) மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(4) விடைகளை வினாத்தாளிலேயே எழுதி அதனை விடைத்தாள்களுடன் அனுப்ப வேண்டாம்.

(5) கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களை கைவிட எத்தனிக்க வேண்டாம். இது குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

(6) அறிவை நிகழ்நிலைப்படுத்துவதற்கு அண்மையில் வெளியான இதழ்கள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தவும்.

(7) புதிய வினாவுக்கு விடையளிக்க ஆரம்பிக்கும்போது ஒரு புதிய பக்கத்தைப் பயன்படுத்தவும்.

- * * * -